සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Tamil

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	**தமிழ்மொழியும் இலக்கியமும்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. நன்னீர் தடாகங்கள் தண்ணளியை வழங்கட்டும் இங்கு தண்ணளி என்பதன் பொருள்.
1. குளிர்ச்சி 2. செல்வம் 3. அழகு 4. அன்பு

02. நறுந்தருக்கள் வழிநெடுகிலும் நிழல் தர, மந்தமாருதம் வீசட்டும் இங்கு மந்தமாருதம் என்பதன் எதிர்ப்பொருள்.
1. புயல் காற்று 2. சண்ட மாருதம்
3. பவனம் 4. தென்றல்

03. முனிபுத்திரிகள் பூஞ்சோலையில் மலர் கொய்துக் கொண்டிருந்தனர். இங்கு புத்திரி என்பதன் எதிர்ப்பாற்சொல்.
1. புத்திரை 2. புத்தன் 3. புத்திரன் 4. புதியவன்

04. வேள்விச் சாலையில் புரோகிதர் தம் கடமைகளை செய்தார். புரோகிதர் என்பதன் கருத்து.
1. மதத்தலைவர் 2. சட்டவல்லுனர்
3. தரகர் 4. மதச்சடங்கு நடத்தும் குரு

05. இன்றைய கல்வி முறையின் கீழ் மாணவர்களிடமிருந்து இன்டலிஜன் (Intelligence) எதிர்பார்க்கப்படுகின்றது. 'இன்டலிஜன்' என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்.
1. நுண்ணறிவு 2. அறிவு 3. திறன் 4. மனப்பான்மை

06. வதன மதி பூத்த பூங்குவளை காட்டிடையே. இங்கு வதனமதி என்பது எவ்வணி.
1. உவமையணி 2. உருவக அணி
3. தன்மை நவிற்சி 4. உயர்வு நவிற்சியணி

07. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடரை கொண்டமைந்த வாக்கியம் அல்லாதது.
1. மின்னலின் போது வெட்ட வெளியில் நிற்கக் கூடாது.
2. பிறைச்சந்திரன் தெட்டத் தெளிவாக தெரிந்தது.
3. பிரபா களைப்பினால் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டாள்.
4. திருடர்கள் பட்டப்பகலில் கொள்ளையிட்டனர்.

08. பின்வருவனவற்றுள் 'நாவடக்கம் அவசியம்' என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி.
1. பொறுத்தார் பூமியாள்வார்.
2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
3. நுணலும் தன் வாயாற்கெடும்.
4. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு

Past Papers Wiki

09. பொம்மை வாங்கித் தரும்படி குழந்தை, தாயிடம் பல்லுக்காட்டியது. இங்கு 'பல்லுக்காட்டுதல்' என்ற மரபுத் தொடரின் பொருள்.
1. சிரித்தல்
2. வீண்வாதம் புரிதல்
3. இரத்தல்
4. கெஞ்சுதல்

10. பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியமாக அமைவது.
1. இராம இலக்குமணர்கள் காட்டுக்குச் சென்றனர்.
2. தாய்ப்பறவை அலகால் குஞ்சுகளுக்கு இரையூட்டியது.
3. சங்கப்புலவர்களுள் கபிலர் சிறந்தவர்.
4. சுமனும் சுந்தரும் நல்ல நண்பர்கள்.

11. பின்வருவனவற்றுள் பிறவினையாக அமையும் வாக்கியம்.
1. பூஜா நிலத்தில் உருண்டாள்.
2. சுமன் வாகனத்தை திருப்பினான்.
3. இயற்கை காட்சியை கண்டோம்.
4. மாணவர்கள் நன்றாக படித்தார்கள்.

12. பின்வருவனவற்றுள் எதிர்ப்பொருளால் அமையும் இணைமொழி.
1. தில்லுமுல்லு
2. சப்புச்சவர்
3. ஆதிஅந்தம்
4. கோணல்மாணல்

13. பின்வருவனவற்றுள் உயிர் முன் மெய் புணர்வதற்கு உதாரணமாக அமைவது.
1. கலை + அலகு
2. கடல் + காட்சி
3. கலா + பீடம்
4. பால் + ஆடை

14. அவன் நீலம் குடித்தான். இங்கு இடம்பெற்றுள்ள ஆகுபெயர்.
1. பொருளாகு பெயர்
2. சினையாகு பெயர்
3. இடவாகு பெயர்
4. குணவாகு பெயர்

15. எத்தனையோ படித்த பொறியியலாளர்களாலும் முடியாத செயல்கள் சின்னஞ்சிறு உயிரிகளால் முடிகின்றன. - இவ்வாக்கியத்தின் எழுவாய்.
1. பொறியியலாளர்கள்
2. செயல்கள்
3. உயிரிகள்
4. எத்தனையோ

16. பின்வருவனவற்றுள் தனிவினையைக் கொண்டமைந்த வாக்கியம்.
1. உன்னைப்பற்றி பல விடயங்களை கேள்விப்பட்டோம்.
2. அநீதிக்கு எதிராக தட்டிக்கேள்.
3. நாங்கள் நல்ல விடயங்களை பின்பற்றுவோம்.
4. நான் உன்னைப்பற்றி அவனிடம் விசாரித்தேன்.

17. பின்வருவனவற்றுள் முன்னொட்டினை பெற்ற சொல்.
1. உள்ளுறை
2. மறுமை
3. கண்ணோட்டம்
4. எழுத்தாளன்

18. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்.
1. நீ வீட்டுக்கு வராதே
2. நீ பாடலைக் கேள்
3. அவள் கதை எழுதினாள்
4. தேனீக்கள் தேனை சேகரித்தன.

19. அவர் இப்போது பாடம் படித்தார் இங்கு இடம்பெற்றுள்ள வழு.
1. எண் வழு
2. கால வழு
3. திணை வழு
4. பால் வழு

20. இங்கே பார் உன் மிடுக்கான பேச்சை உன்னிடமே வைத்துக் கொள் - இங்கு இடம்பெற வேண்டிய நிறுத்தக் குறிகள்.
1. வியப்பக்குறி, முற்றுப்புள்ளி
2. காற்புள்ளி, முற்றுப்புள்ளி
3. வினாக்குறி, முற்றுப்புள்ளி
4. அரைப்புள்ளி, முடிப்பிசைக்குறி

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- முதலாம், இரண்டாம் வினா உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் தலைப்புக்களுள் ஏதாவதொன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.
    1. இயற்கை வளங்களை பாதுகாப்போம்.
    2. 'தோல்வி வெற்றியின் முதற்படி' என்ற தலைப்பிலான மேடைப்பேச்சு.
    3. நடுக்காட்டில் தன்னந்தனியாக அகப்பட்டுக் கொண்ட வேளை ….. கற்பனைக் கட்டுரை.
    4. 'உழைப்பின் மகிமை' என்ற தலைப்பிலான சிறுகதை.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு கடிதம் அல்லது துண்டுப் பிரசுரம் எழுதுக.
    1. முறையான குப்பை அகற்றல் இல்லாமையால் உருவாகியுள்ள சுகாதார சிக்கல்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி நகர சபைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

    2. "தூய்மையான சூழல் - நுளம்பில்லாத வாழ்க்கை" என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    1. நரை, திரை, மூப்பு நெருங்க அஞ்சிக்கிடந்த சான்றோன் யார்?
    2. காந்தருவமணம் புரிந்து கொண்டோர் யாவர்?
    3. நளவெண்பா குறிப்பிடும் மூன்று காண்டங்களும் யாவை?
    4. ஆயிரம் முறை தோற்ற போதும் சோர்வடையாது முயற்சித்தவர் யார்?
    5. நகரத்தின் நிழலை பெற்றுக் கொண்டதாக கட்டுரையில் குறிப்பிடும் இடம் எது? அக்கட்டுரையின் ஆசிரியர் யார்?

(2x5=10 புள்ளிகள்)

04 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    1. ஒவ்வொரு கண்டுபிடிப்புகளுக்கு பின்னால் பல தோல்விகள் ஒளிந்துள்ளன. – வழுவைக் குறிப்பிட்டு வழுவற்ற விதத்தில் எழுதுக.
    2. விடியக்காத்தாலை குடுக்கிறதை கொடுங்க ஏறுங்க தம்பி - இப்பேச்சு வழக்கை நியம விதத்தில் எழுதுக.
    3. இனியும் நாங்கள் காலதாமதம் செய்யாமற் புறப்படுவோம். மகளே - இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலையை குறிப்பிடுக.
    4. 'பக்கம் பக்கமாக' என்ற அடுக்குத்தொடரைக் கொண்டு வாக்கியம் அமைக்குக.
    5. மாணவர்கள், இணையத்தளங்களை கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகிறார்கள். இச்செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

(2x5=10 புள்ளிகள்)

05. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. அழைப்பிதழ் ஒன்றில் உள்ளடக்க வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக.
    2. நேர்காணல் என்றால் என்ன?
    3. விமர்சனத்தின் பயன்கள் இரண்டு தருக?
    4. விவாத கருத்துக்களை முன்வைக்கும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய 2 விடயங்களைத் தருக?
    5. பந்தியொன்றை எழுதும் போது தவிர்க்க வேண்டிய 2 விடயங்களை குறிப்பிடுக.

(2x5=10 புள்ளிகள்)

06. பின்வரும் சொற்களின் கருத்துப்புலப்படும் வகையில் வாக்கியம் எழுதுக.

1. வைகறை -
2. ஆணை -
3. வெகுமதி -
4. அலட்சியம் -
5. சான்றோர் -

(2x5=10 புள்ளிகள்)

07. பின்வரும் செய்யுளை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் - கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கை நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து

நாடி மட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே – நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன் வைத்தார் தாழ்ந்து

1. இங்கு வர்ணிக்கப்படும் காட்சி யாது?
2. கங்கை நாடனது நாட்டுச்சிறப்புக்கள் யாவை?
3. எதனை பிடித்துத்தருமாறு யார் யாரிடம் வேண்டியது?
4. பெண்களின் அழகு நலன்கள் யாவை?
5. பெண்கள் அன்னப்பறவையை நாடி வளைத்த விதம் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?

(2x5=10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாந் தவணைப் பரீட்சை –2025

பாடம் தமிழ்மொழியும் இலக்கியமும்

விடைப்பத்திரம்

Tami தரம் - 09

பகுதி – I

01. 1	06. 2	11. 2	16. 4
02. 2	07. 3	12. 3	17. 3
03. 3	08. 3	13. 3	18. 1
04. 4	09. 4	14. 4	19. 2
05. 1	10. 1	15. 2	20. 1

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

01. கட்டுரைப் புள்ளித்திட்டம்

பொருள் பொருத்தம்	-	09
கட்டுரை நுட்பம்	-	06
மொழிச் செம்மை	-	04
சொல் எண்ணிக்கை	-	01
		20 புள்ளிகள்

02. கடிதம் / துண்டுப்பிரசுரம்

அமைப்பு	-	04	(முகவரி, விளிப்பு, முடிவுரை)
விடயம்	-	04	
மொழிநடை	-	02	
		10 புள்ளிகள்	

03. 1. பிசிராந்தையார்
2. துஷ்யந்தன், சகுந்தலை
3. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்
4. தோமஸ் அல்வா எடிசன்
5. யாழ்ப்பாணம், டொமினிக் ஜீவா

(2x5=10 புள்ளிகள்)

04. 1. எண்வழு - ஒவ்வொரு கண்டுபிடிப்புக்கு பின்னாலும் பல தோல்விகள் ஒளிந்துள்ளன.
2. விடியற்காலையிலே கொடுக்கிறதை கொடுங்க ஏறுங்க தம்பி
3. நாம் - எழுவாய் புறப்படுவோம் - பயனிலை
4. அவள் பக்கம் பக்கமாக கடிதம் எழுதினாள். (பொருத்தமானவற்றுக்கு புள்ளி வழங்குக)
5. இணையத்தளங்கள் மாணவர்களால் கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

(2x5=10 புள்ளிகள்)

05. 1. தலைப்பு, விளிப்பு, இடம், காலம், நேரம், ஏற்பாடு (ஏதாவது 2 விடயம்)
2. ஒருவரோடு தொடர்பு கொண்டு கேள்வி கேட்டு விவரங்களைப் பெறும் ஓர் உரையாடல்.
3. i. படைப்பாளிகள் தரமான படைப்பை வழங்க உதவும்.
ii. சிறந்த வாசகர்களை உருவாக்க துணை புரிகிறது. (பொருத்தமானதற்கு புள்ளி வழங்குக.)
4. i. தலைப்பை பூரணமாக விளங்கிக் கொள்ளல்.
ii. தெளிவான உச்சரிப்பு / தொனி வேறுபாடு.
5. i. கூறியது கூறல்.
ii. முன்னுக்குப் பின் முரணாக கூறல். (பொருத்தமானதற்கு புள்ளி வழங்குக.)

(2x5=10 புள்ளிகள்)

06. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக. (2x5=10 புள்ளிகள்)

07. 1. நளனின் கட்டளைக்கேற்ப தோழிப் பெண்கள் அன்னப்பறவையை பிடிக்கும் காட்சி.
2. எருமைகள் கரும்பு வயலில் புகுந்து கரும்புகளை கடித்து குதப்பி முத்துக்களை கக்குதல்.
கங்கை நதி பாய்தல்.
3. அன்னத்தை பிடித்து தருமாறு நளன் மகளிரிடம் வேண்டியமை.
4. மயிற் குழாத்தை ஒத்த பெண்கள்.
பசுமையான கூந்தல்.
வல்லிக்கொடி போன்றவர்கள்.
5. மயில் கூட்டமானது ஓடி வளைத்தது போன்று

(2x5=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank